தீர்க்கதரிசி செய்தி தமிழ்நாட்டுக்கு எப்படி வந்தது?

தொகுப்பு: K.ராஜா. கோவை.

(இந்த பதிவு கடைசி கால தீர்க்கதரிசி பிரான்ஹாம் செய்தியில் உள்ளவர்களுக்கு மாத்திரமே)

(தெரிந்து கொள்வோம்)

1985-94களில் நமது தீர்க்கதரிசி செய்தி புத்தகங்கள் தமிழில், நமக்கு பார்சலிலோ, தபாலிலோ கட்டு கட்டாக, மூட்டை மூட்டையாக வரும். அது எப்படா வரும் என்று காத்திருந்து கடைசிகால செய்தி விசுவாசிகள் பாய்ந்து சென்று

பார்சலை பிரித்து அந்த புத்தகத்தின் தலைப்பை பார்த்து முகத்தில் 1000 வால்ட்ஸ் வெளிச்சம் பரவிட அதை அப்பவே படிக்க ஆரம்பித்த நாட்களை திரும்பி பார்க்கிறேன்.

இன்றைக்கு இருப்பதை போல் அன்றைக்கு கம்யூட்டர், நவீன மொபைல்கள், இண்டெர்னெட் கனெக்ஷன் இல்லாத ஒரு அருமையான வசந்த காலங்கள்.

தமிழ் நாட்டில் இன்று இருப்பது போல கடைசி கால செய்தி சபைகள் அதிகம் இல்லை. கோவையில் ஒரே ஒரு சபை. விசுவாசிகள் அதிகம்.

இந்த கடைசிகால தீர்க்கதரிசி செய்தி புத்தகங்கள் இன்றைக்கு இவ்வளவு reach ஆக தேவன்

இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் பயன்படுத்திய பாத்திரம் S.C.ஜேக்கப் என்று சொல்லக்கூடிய சாமுவேல் கிறிஸ்டோபர் ஜேக்கப். யார் இவர்? கடைசி கால செய்தியில் உள்ள பழைய ஆட்களுக்கு தெரியும். இவர் தமிழ் நாட்டில் திருநெல்வேலி மண்ணுக்கு சொந்தக்காரரர். இவருக்கு பின்னால் இவர் படித்த பட்டங்களின் எழுத்துக்கள், இவர் பெயரில் உள்ள எழுத்துக்களை காட்டிலும் அதிகமாம். இவர் Scientist ம் கூட. மனிதன் முதன் முதலில் நிலவுக்கு சென்று கல்லையும், மண்ணையும் பூமிக்கு கொண்டு வந்து அதை ஆராய்ந்து அது குறித்து விஷேச

ஆராய்ச்சி கட்ட்டுரை கொடுக்க 12 இடங்களுக்கு அனுப்பப்பட்டது.

அதை ஆராய்ந்தவர்களில் ஒருவர்தான் இந்த சகோதரர். S.C.ஜேக்கப். என்பது ஒரு விஷேச தகவல். அதிகமாக, ஏன் மிக அதிகமாக படித்திருந்தாலும், கொஞ்சம் கூட பெருமை, மேட்டிமை இல்லாதவர், எளிமையான தோற்றம், அமைதியான பேச்சு, தீர்க்கமான பார்வை, தீர்க்கதரிசி செய்தியின் மேல் தீராத தாகம். தன்னை விட வயதில் சிறியவர்களையும் வாங்க, போங்க என்று அழைக்கும் பண்பாடு இது இவரது மிக பெரிய சொத்து

என்பது அவரைப் பார்த்தவர்களுக்கும், பழகினவர்களுக்கும் புரியும்.

ஆரம்பத்தில் அவர் பாலாசீர் லாறியின் உபதேசத்தில் ஈர்க்கப்பட்டு, அவரது ஆசிரமத்தில் சென்று தங்கி பல லட்சங்கள், சொத்துக்களை இழந்து. பின் மறுபடியும் தீர்க்கதரிசி செய்திக்கே வந்தார். மறுபடியும் வாழ்க்கையை ஜீரோவில் இருந்து அமைதியாக ஆரம்பித்தார். சென்னையில் ஒரு கல்லூரியில் பேராசியராக பணியாற்றினார்.. அன்றைய மதிப்புக்கு 600/- அறுநூறு ரூபாய் மட்டுமே சம்பளம்.. மிக சாதாரண வீட்டில் வாடகை கூட கொடுக்க

முடியாத சூழ்நிலையில் தன் மனைவி, மற்றும் 4 மகள்களுடன் கர்த்தருக்குள் சந்தோஷமாக சென்னை சூளையில் இருந்தார். இவர் குடும்பத்தில் இவர் மாத்திரமே செய்தியில் இருந்தார். குடும்பத்தினர் CSI ஸ்தாபனத்தினர்.

இவர் பாலாசீர் லாறியிடம் இருந்த நாட்களில், (பாலாசீர் லாறி, உபதேசத்தில் சரியாக இருந்த காலங்களில்) பாலாசீர் லாறி இவரைப்பார்த்து நீ தீர்க்கதரிசி பிரான்ஹாம் செய்தியை மொழிப்பெயர்க்கப் போகிறாய் என்று தீர்க்கதரிசனம் சொல்ல இவர் அரண்டு போய் விட்டாராம் .ஐய்யா.. நான் எப்படி அவ்வளவு பெரிய

கர்த்தருடைய தீர்க்கதரிசியின் செய்தியை மொழிப்பெயர்க்க ..எனக்கு என்ன தகுதி இருக்கு.. ஒரு தகுதியும் இல்லை.. எப்படி நான் இதை செய்வேன் என்று பயந்து லாறியிடம் சொல்ல.. லாறியும் ..brother கண்டிப்பாக நீங்கள் செய்யதான் போகிறீர்கள் என்று கூறி சில ஆண்டுகள் ஆனது... காலசக்கரம் சுழன்றது... 600 ரூபாய் சம்பளம் வாங்கி கொண்டு குடும்பத்தை நடத்த கஷ்ட்டப்பட்டு கொண்டிருந்த அவர் மனதில் எப்படியாவது இந்த மகத்தான தீர்க்கதரிசி பற்றி இந்த தமிழ் நாட்டு ஜனங்களுக்காகவாவது வெளிப்படுத்தி விட வேண்டும் என்று ஏவுதல் இருந்து கொண்டே இருந்தது.. ஒரு காரியத்தை

நம்முடைய கடைசிகால செய்தியில் உள்ள பழைய ஊழியர்கள் அறிவீர்கள். அந்த நாட்களில் சிவப்பு கலர் அட்டைப்படத்தில் நம்முடைய கடைசிகால தீர்க்கதரிசி படத்துடன் கூடிய ஒரு சிறிய புத்தகம். அதன் தலைப்பு புறஜாதிகளுக்கு ஓர் தீர்க்கதரிசி.அந்த புத்தகத்தை அவர் வெளியிட்ட போது அந்த மாத சம்பளம் ரூபாய் 600 ஐயும் செலவு செய்து விட்டார், இதனால் அந்தக்குடும்பம் அந்த மாதம் சரியான ஆகாரமின்றி ஈரத்துணியை வயிற்றில் கட்டிக்கொண்டார்களாம்.

தீர்க்கதரிசி செய்தியின்மேல் உள்ள தாகம், கடும் பசி, பட்டினியை மேற்கொள்ளச் செய்தது.

இன்று தீர்க்கதரிசி செய்தி லட்சக்கணக்கில் இந்தியாவில் பல இடங்களில் பல மொழிகளில் கிடைக்கிறது என்று சொன்னால், அவருடைய உழைப்பும் அவருடைய பிரயாசமும் கிரயமாக செலுத்தப்பட்டதும் ஒரு காரணம்.

இவரைப்பற்றி கூறும்முன் இன்னொரு காரியத்தைக் கூறுகிறேன்.

தீர்க்கதரிசி உயிருடன் இருந்த நாட்களில் சபை ஆராதனை முடிந்தவுடன் விசுவாசிகளுடன் கைகுலுக்கிக்கொள்வது தீர்க்கதரிசி பிரான்ஹாமின் வழக்கமாய் இருந்தது.

ஒரு சமயம் ஆராதனையில் கலந்துகொண்ட ஒரு இளைஞனிடம் உன் கையில் இந்தியாவைப்

பார்கிறேன் என்று தீர்க்கதரிசனமாக உரைத்தார், அந்த இளைஞர் புல்லரித்துப்போனார்.

ஏனென்றால் அவருக்கு ஏற்கனவே அவருடைய உள்ளத்தில் தீர்க்கதரிசி செய்தியை இந்தியாவிற்கு எடுத்துச்செல்லவேண்டும் என்ற எண்ணம் வாஞ்சை இருந்தது.அந்த இளைஞர்தான் கனடா நாட்டை சார்ந்த எடி பிஸ்கல் (Ed. Biskal); என்பவர். காலச்சக்கரம் சுழன்றது. தீர்க்கதரிசி 1965-டிசம்பரில் காட்சியில் இருந்து கடந்து சென்றார்.

இந்தியாவில் ஆந்திரப் பிரதேசத்தில் ராஜமுந்திரியில் செய்தி புத்தகங்கள் அச்சுப் பணிகள் ஆரம்பிக்கபட்டு ..அது ஏனோ

எடுபடாமல் போனது.. தமிழ்நாட்டில் தீர்க்கதரிசி பிரான்ஹாம் குறித்தும், அவர் செய்தியை குறித்தும் கேள்விப்பட்ட ஒரு சிலர் இருப்பதாகவும் அவர்கள் பாலாசீர் லாறியிடம் இருந்து திரும்பி வந்தவர்கள் என்றும் கேள்விப்பட்ட எடி பிஸ்கல் குருப் சென்னைக்கு வந்து இறங்கி விசாரித்த போது சில வருஷங்களுக்கு முன் SG.ஜேக்கப் என்பவர் புற ஜாதிகளுக்கு ஓர் தீர்க்கதரிசி என்ற புத்தகத்தை வெளியிட்ட விபரத்தை அறிந்து சென்னை சூளையில், S.C.ஜேக்கப் அவர்களை சந்தித்து...... ....

ஓ.. என்னே? நீரின் மேல் உன் ஆகாரத்தை போடு பல நாள் சென்று

அதன் பலனைக் காண்பாய் (பிர. 11:1) கண்ணீரோட விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடு அறுப்பார்கள் (சங். 126:5) என்ற வசனத்தின்படி அறுவடை ஆரம்பமானது..

சூளையில் செய்தி புத்தகங்கள் அச்சுப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் 1985-ல் சென்னை கோடம்பாக்கம் Dr. சுப்பராயன் நகரில் சொந்த இடம் வாங்கி கட்டிடம் எழுப்பி, அச்சுப்பணி தொடங்கப்பட்டது. சகோ. டாம் ப்ரௌன் (Dom Brown) அதற்கு ஒரு பெரிய ஆப்செட் மெஷின் வாங்கி கொடுத்தார். அந்த அச்சகதிற்க்கு வில்லியம் பிரான்ஹாம் குட் நியூஸ்

சொசைட்டி என்ற பெயரில் அருமை சகோதரர். S.C. ஜேக்கப் அவர்களின் பொறுப்பில் இயங்கியது.. லட்சக்கணக்கான செய்தி புத்தகங்கள் தமிழ் நாட்டின் பட்டி தொட்டிகள் எல்லாம் அனுப்பப்பட்டது..

இந்த செய்தி புத்தகங்களை S.C.ஜேக்கப் அவர்கள் அருமையான முறையில், Dedication..ஆக மொழிப்பெயர்ப்பு செய்வார்.அவரது மொழிப்பெயர்ப்பு குறித்து சென்னை ஏல் பெத்தேல் சபையின் தலைமை போதகர் PM.சாமி அவர்கள், ஒரு முறை என்னிடம் பேசிக்கொண்டு இருந்தபோது சொன்னார்.. S.C.ஜேக்கப் அவர்களது மொழிப்பெயர்ப்பு... சர்க்கரை

தொட்டும் சாப்பிடலாம், சட்னி தொட்டும் சாப்பிடலாம், குழம்பு ஊற்றியும் சாப்பிடலாம், வெறும் தயிரிலும் சாப்பிடலாம்... அவ்வளவு சுவையான மொழிப்பெயர்ப்பு என்பார்..அது உண்மை.. "கற்றோரை கற்றோரே காமுறுவர்". பாருங்கள்!

சாதாரண மட்டி பேப்பர், ஆப்செட்டில் அச்சடிக்கப்பட்ட அன்றைய செய்திபுத்தங்களில் பரிசுத்த ஆவியின் அபிஷேம் இருந்தது. அதை படிக்கும் போதே, பிரான்ஹாம் கூடாரம் அல்லது அவரது கூட்டத்தில் அமர்ந்து நேரடியாக செய்தி கேட்பது போலிருக்கும்.

சகோ.டாம் பிரௌனின், உறவினரான கிளாடிஸ் என்ற அம்மையார் இந்த செய்தி புத்தக அச்சுப்பணிக்கு இன்றியமையாத உதவிகள் செய்தார். கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்த WMB good news society.. மேலே நீங்கள் பார்க்கிற படத்தில் உள்ளது போல கட்டிடம் நவீன வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டு, அந்த அம்மையாரின் நினைவாக அந்த கட்டிடத் பெயர் சூட்டப்பட்டது.

இக்கட்டிடத்தில் வெளியூரில் இருந்து சென்னைக்கு வரும் கடைசி கால செய்தி ஊழியர்களுக்கு இலவசமாக தங்குவதற்கு அறைகள் ஏற்பாடு செய்யப்பட்டன..

நாளடைவில்.. அது நடைமுறையில் சரிபடாததால்.. S.C.ஜேக்கப் அவர்கள் வெளியூரில் இருந்து வரும் ஊழியர்களுக்கு தன் சொந்த செலவில் கோடம்பாக்கம் உமா லாட்ஜில் தங்க வைத்து அனுப்புவார்கள். எனக்கும் சில சமயங்களில் அப்படி உதவியிருக்கிறார்.

அது மட்டுமல்ல. பிரஸ்க்கு வரும் ஊழியர்களை உபசரித்து காணிக்கை கவர் கொடுத்து அனுப்புவார்கள். ஒரு எளிமையான வீட்டில் குடியேறி செய்திக்கு தன்னை அர்ப்பணித்து எந்த லாபமும் எதிர்பார்க்காமல் இருந்த அந்த சகோதரரை கர்த்தர் மிக

உயர்ந்த ஸ்தானத்திற்க்கு கொண்டு சென்றார்.

இந்த பணியிலும் நிறைய பொறாமைகள் அவர் மீது ஒரு சில ஊழியர்களுக்கு இருந்தது. அவர் மீது நிறைய புகார்கள், குற்றம், குறைகள், அவதூறுகள் சிலர் சொன்னாலும் அவர் எதையும் காதில் போட்டுக்கொள்ளவில்லை. கர்த்தர் அவருக்கு கொடுத்த பணியை நிறைவேற்றி 1995 ம் ஆண்டு இந்த உலக வாழ்க்கையில் இருந்து கடந்து சென்றார்......

தொகுப்பு: K.ராஜா. கோவை.

Evening Light Tabernacle
Bro. Ed Byskal
Cloverdale, B.C. Canada

CLOVERDALE BIBLE WAY

சகோ. எட் பிஸ்கல்